திரு. எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலர்கள் காலை 10 மணிக்கு அலுவலகத்திற்கு வந்துவிட்டு, வெளியிலே சென்று காபி, டீ பருக வேண்டுமென்ற முறையில் வெளியே செல்வதால் அலுவலக வேலைகள் தேக்க நிலையில் கிடக்கின்ற காரணத்தினால் தலைமைச் செயலக அலுவலகத்திற்குள்ளேயே காபி, டீ கொடுப்பதற்கு வேண்டிய வழி வகைகள் செய்யப்படுமா? அதனால் வேலைகள் பாதிக்கப்படாமல் நடைபெறும் என்பதை முதல்வர் அவர்கள் கவனிப்பார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, காலை 10 மணிக்கு அவர்கள் வந்துவிட்டதாகச் சொல்கிறார். அதையே பரிசீலிக்க வேண்டும்.

9-10 மணி

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், தலைமைச் செயலகத்திற்கு என்று தனியாக ஒரு புதிய கட்டிடம் திருச்சியிலோ அல்லது ஈரோட்டிலோ அமைக்கப்படும் என்று ஏற்கெனவே அறிவித்திருந்தார்கள். ஆக, நாற்பதாண்டுக் காலம் நெருங்கிய நண்பர் என்று சொல்லுகின்ற நம்முடைய கலைஞர் முதல்வரவர்கள், அவர் சொன்ன அந்தக் கருத்தின் அடிப்படையில், இப்பொழுது அமைச்சர்களுடைய அறைகளிலெல்லாம் ஏ.சி. வைக்கப்பட்டு குளு குளு என்று இருக்கின்றன. ஆனால் இங்கே இருக்கும் பொழுது அந்த வசதி இல்லை. ஆகவே, எல்லோருடைய ஒட்டுமொத்த நன்மையையும் கருதி, திருச்சியிலோ அல்லது ஈரோட்டிலோ தனியாக தலைமைச் செயலகத்திற்கும், சட்டமன்ற அலுவலகத்திற்கும் என்று கட்டிடம் கட்டுவதற்கான முழு முயற்சியிலே ஈடுபடுவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இங்கேயே ஏ.சி. வேண்டும் என்று உறுப்பினர் சொல்கிறார். திருச்சியும், ஈரோடும் இதைவிட அதிக கோடைப் பிரதேசங்கள்.

மேல்நிலைப்பள்ளிகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல்

*1719 **திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—:

(அ) தொலைக்காட்சி மூலம் கல்வி நிகழ்ச்சிகளைக் காட்ட மேல்நிலைப் பள்ளிக்கூடங்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1990 மார்ச் 22]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே,

(அ) தற்போது மேல்நிலைப் பள்ளிகளில் அரசு செலவில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

தனியார் கல்லூரிகள், பள்ளிகளில் நன்கொடை வசூல்.

*2623 **திரு. அ. இரகுமான்கான் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தனியார் கல்லூரிகள், பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றில் நன்கொடை என்ற பேரில் பெரும்பணம் வசூலிப்பதால், ஏழை எளிய மாணவர்கள் படிக்க முடியாத சூழ்நிலை குறித்து அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தனியார் பள்ளிகள் மற்றும் கல்லூரி களில் மாணவர்களைச் சேர்க்கும்போது நன்கொடை எதுவும் வசூல் செய்யக்கூடாது என அவ்வப்போது பள்ளி, கல்லூரிக் கல்வி இயக்குநர்களால் சம்பந்தப்பட்ட பள்ளி கல்லூரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது.

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பண உதவியைப் பெற்று நடைபெறும் தனியார் கல்லூரி, பள்ளிகளுக்கும் இது பொருந்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, அரசு நிதி உதவி பெறுகிற, ஆசிரியர்களுடைய சம்பளத்திற் காகப் பெறுகிற நிதி தவிர, நிர்வாகச் செலவுக்காக ஒரு பகுதி பெறுகிற எந்தக் கல்வி நிலையமாக இருந்தாலும், நன்கொடை வசூலிப்பது என்றால் சில முறைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. உரிய திட்டத்திற்கு அல்லது பணிக்கு, பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினுடைய ஆலோசனையோடு, அவர்களுடைய இசை